
# திராவிடத்தால் வாழ்கிறோம்

778

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே...

**நீரை.மகேந்திரன்**

101

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கம்பம் நடராஜன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# கம்பம் நடராஜன்

# ‘கழகத்தின் புலிப் போத்து! போர்வாள் மீசைக்காரர்!’




“வேங்கையைப் போன்ற கம்பீரம்! அடக்கத்திற்கோர் எடுத்துக்காட்டு! அன்பு பொழியும் விழிகளுக்கும் அடர்த்தியான மீசைக்கும் சொந்தக்காரர்! கழகத்தின் புலிப்போத்தாக கம்பம் தொகுதியில் செயல்பட்ட தங்கக் கம்பி” என முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய அன்பு உடன்பிறப்பு கம்பம் நடராஜன்.

1982-ஆம் ஆண்டு ஜூலை மாதத் தொடக்கத்தில் அவர் மறைந்தபோது, “போய் விட்டாயா; போர்வாள் மீசைக்காரா!” என முரசொலி ஏட்டில் கலைஞர் தீட்டிய சொற் சித்திரம், எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உணர்ச்சி மாறாத கல்வெட்டுச் சித்திரம். கலைஞரின் அந்தக் கடிதமே கம்பம் நடராஜனை இன்றும் அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறது, அழியாத புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறது. 1960-ஆம் ஆண்டுவாக்கில் சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும்போதே மாணவர் முன்னேற்றக் கழகத்தில் தீவிரமாகச் செயல்பட்டவர்.

## தோள் கொடுத்த தொண்டர்

அன்றைய ஒன்றுபட்ட மதுரை மாவட்டம், உத்தமப்பாளையம் வட்டம், கம்பம் கிராமத்தில் 1941-ஆம் ஆண்டு, மார்ச் 18-ஆம் தேதி, பிறந்தவர் நடராஜன். தந்தையார் கோவிந்தசாமி, ஏலக்காய் பயிரிடும் சிறு விவசாயி. உத்தம பாளையத்தில் தொடக்கக் கல்வி பயின்றவர், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பட்டமும், அங்கிருந்து சென்னை பச்சையப்பன் கல்லூரிக்குப் பட்ட மேற்படிப்புக்கும் வந்தார்.

“கல்லூரியில் பயிலும்போது கழகக் கொள்கைகளில் ஊறித் திளைத்த சிங்கக்குட்டி”, “புயல், பூகம்பம், எரிமலை இத்தனைக்கு மிடையிலே இந்தக் கழகம் அகப்பட்டு உழன்றபோதும், அசையாத உறுதியுடன் தோள் கொடுத்த தொண்டர்” என அந்தக் காலகட்டத்தில் அவர் ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

‘விலைவாசி உயர்வுப் போராட்டம்’, ‘இந்தி எதிர்ப்புப் போராட்டம்’ என கழகத்தின் தீவிரமான போராட்டக் களங்களில் எல்லாம் தவறாமல் இடம்பெற்றவர் மாணவர் நடராஜன். குறிப்பாக, இந்தி எதிர்ப்புக் களத்தில் சென்னை, மதுரை என இரண்டு களங்களிலும் தீவிரமாக ஈடுபட்ட மாணவர்களில் நடராஜனும் ஒருவர். அவரோடு சமகால மாணவராக கழகப் போராட்டக் களத்தில் நின்றவர்களில் இன்றைய கழகப் பொதுச்செயலாளர் உள்ளிட்டோரும் இருந்தனர்.

கம்பத்தில் கழகப் பணிகளைத் தீவிரப்படுத்தி, அனைத்து மக்களிடமும், கல்வி, வேலை வாய்ப்புகளில் கவனத்தைத் திருப்புவதற்கான பெரும் பணிகளைச் செய்தார் நடராஜன். குறிப்பாக, கழகத்தின் சார்பில், ஏலக்காய் விவசாயிகள் சங்கத்தை உருவாக்கி, அந்தச் சங்கத்தின் தலைவராக இருந்தார்.

## 822 வாக்குகளில் தோல்வி

நெருக்கடி நிலைக்குப் பின்னரான 1977-ஆம் ஆண்டு தேர்தலில் கம்பம் தொகுதி வேட்பாளராக நடராஜனை நிறுத்தினார் கலைஞர். அவரை எதிர்த்துப் போட்டியிட்டவருக்கும், நடராஜனுக்கும் வாக்கு வித்தியாசம் 822 வாக்குகள்தான். அந்த அளவுக்குத் தனது செல்வாக்கை வைத்திருந்தவர் நடராஜன்.

1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அன்றைக்கு இருந்த பெரியகுளம் மக்களவைத் தொகுதிக்கு நடராஜனை வேட்பாளராக களமிறக்க விரும்பினார் கலைஞர். தலைவரின் விருப்பத்தைத் தெரிவிக்கச் சென்ற கழக முன்னோடி ரகுமான்கான் அவர்களிடம் நடராஜன் குடும்பத்தினர் “வேட்பாளராக நிற்க விரும்பவில்லை. கழகப் பிரச்சாரப் பணியில் குடும்பத்தினர் அனைவரும் முன்நிற்போம்” எனக் கூறி இருக்கின்றனர். ரகுமான்கான் அவர்களோ “இது தலைவரின் விருப்பம், இங்கு தலைவரே தேர்தலில் நிற்பதாக நினைத்துக் கொண்டு, உங்களை களமிறங்கச் சொன்னார்” என்றதும் நடராஜன் குடும்பத்தினர் மறுபேச்சில்லாமல் அதை ஏற்றுக் கொண்டுள்ளனர். அந்தத் தேர்தலில் மகத்தான வெற்றிபெற்று, நாடாளுமன்ற உறுப்பினரானார்.

“தமிழகத்தில் நமது கழக ஆட்சி இல்லையெனினும், - தமிழகத்தின் எதிர்காலம் ஒளிமயமாக அமைய; எவை எவை தேவையோ அதை நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி, அவர் பேசிய கருத்துகள் என்னை எத்தனையோ முறை கொள்ளை கொண்டிருக்கின்றன.

> **பாராளுமன்றத் தொகுதியில் விருப்பு வெறுப்பின்றி, மக்களின் குறைகளை முன்வைத்து அவர் நடத்திய அறவழிக் கிளர்ச்சிகள் - அவர் எடுத்து வைத்த வாதங்கள் என்றென்றும் பசுமையாக நினைவில் நிலைத்திடத்தக்கவை!”**

மிகப்பெரும் பரப்பளவு கொண்ட பாராளுமன்றத் தொகுதியில் விருப்பு வெறுப்பின்றி, மக்களின் குறைகளை முன்வைத்து அவர் நடத்திய அறவழிக் கிளர்ச்சிகள் - அவர் எடுத்து வைத்த வாதங்கள் என்றென்றும் பசுமையாக நினைவில் நிலைத்திடத்தக்கவை” என நடராஜன் மக்களவை உறுப்பினராக இருந்த காலங்களை நினைவுகூர்கிறார் கலைஞர்.

கழகம் ஆட்சியில் இல்லாத காலத்தில், கம்பம், பெரியகுளம், உசிலம்பட்டி வட்டாரங்களில் தனது செல்வாக்கையே, கழகத்தின் செல்வாக்காகக் கொண்டிருந்த நடராஜன் அவர்கள், தனது 41-வது வயதில் மாரடைப்பு காரணமாக, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு எதிர்பாராதவிதமாக இயற்கை எய்தினார்.

“கழகத்தையே உயிர்மூச்சாக கொண்டிருந்தவரும், இலட்சியக் காளையும், நாடாளுமன்ற உறுப்பினருமான கம்பம் நடராஜனின் இறப்பு என்னை அதிர்ச்சியடைய வைத்தது என அன்றைய நாளை, ‘நெஞ்சுக்கு நீதி;யில் பதிவு செய்துள்ளார் கலைஞர். அன்று உடனடியாக கம்பம் சென்று நேரில் அஞ்சலி செலுத்தி வந்து, முரசொலியில், அவர் எழுதிய கடிதம் , கழகத்தினர் நெஞ்சையெல்லாம் கலங்க வைத்தது.

“உடன் பிறப்பே,

உனக்கு மடல் எழுதுவதென்றால், ஓடிவரும் சொற்கூட்டம்; இன்று நான் தேடி அழைத்தாலும் வர மறுக்கிறதே! மதுரையில் கம்பம் நடராசன் மரணத்தைத் தழுவி விட்டார். இது செய்தியா? அல்ல! அல்ல! என் நெஞ்சில் வைக்கப்பட்ட செந்தீ! நான் எப்படி நம்ப முடியும் இந்தக் கொடுமையை!

சாகும் வயதா? நரை திரை கொண்ட உருவமா? வசந்தமென சொல்லத்தகும் வாலிபப் பருவம்! நிமிர்ந்து நின்றால், நாம் அண்ணாந்து பார்த்துத்தான் அவருடன் பேச முடியும்! அவ்வளவு உயரம்! வேங்கையைப் போன்ற கம்பீரம்! அடக்கத்திற்கோர் எடுத்துக்காட்டு! அன்பு பொழியும் விழிகளுக்கும் அடர்த்தியான மீசைக்கும் சொந்தக்காரர்! கழகத்தின் புலிப்போத்தாக கம்பம் தொகுதியில் செயல்பட்ட அந்தத் தங்கக் கம்பியை, என் சிங்கத் தம்பியை இழந்து விட்டேனே!

மாற்றாரும் போற்றும் ஒரு மாணிக்கத்தை அல்லவோ பறிகொடுத்து விட்டுத் தவிக்கிறோம்! அதற்குள் என்ன அவசரமோ, அந்தச் சாக் காட்டுச் சனியனுக்கு! நம் இயக்கப் பூக்காட்டையல்லவா மிதித்துத் துவைத்து விட்டது!

அந்தப் பத்தரைமாற்றுப் பசும்பொன்னின் நித்திரையைக் கலைக்க இயலாமல் கைபிசைந்து, கண்ணீர் வடித்து நிற்கிறேன். தி.மு.க. என்னும் தியாகக் குடும்பத்தின் திருவிளக்கே! இலட்சியச் சித்திரமே!

கொள்கைக்குன்றே!

போய்விட்டாயா, போர்வாள் மீசைக்காரா!

உடன்பிறப்பே! என்னை அழவிடு! அழுதால்தான் என் இதயக்கனம் கொஞ்சமாவது குறையும்! அதனால் என்னைத் தடுக்காதே! அழவிடு! கதறி அழவிடு! அழுவதுதான் எனக்கு நானே வழங்கிக் கொள்ளும் ஆறுதல்!

அன்புள்ள,

மு.க.

02-07-1982

என கலைஞர் அந்தக் கடிதத்தை முடிக்கையில் கழக உணர்வும், காலத்தின் அழுத்தமும், ஆண்டு பல கடந்தாலும் நமக்கும் அந்த உணர்வைக் கடத்திக் கொண்டு இருக்கும்.

**...துடிக்கும்**

## பண்டிகையை அரசியலாக்கிய பா.ஜ.க.!



வட மாநிலங்களில் நேற்று கொண்டாடப்பட்ட ஹோலி பண்டிகை, இந்தியாவின் சமய நல்லிணக்கக் கொள்கையையே பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகள் கைவிட்டு விட்டன என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

உச்சபட்சமாக உத்தரபிரதேச மாநிலத்தில், ‘இஸ்லாமிய மக்களைத் தொழுகைக்காக கூட வீட்டிலிருந்து வெளியே வர வேண்டாம்’ என்று மாநில அரசே உத்தரவிட்டதாக தகவல்கள் வெளிவருகின்றன. மத்திய பிரதேசம், பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் பா.ஜ.க.வினர், “பிரச்சினை வருவதைத் தடுக்க விரும்பினால், இஸ்லாமியர்கள் வெள்ளிக்கிழமை தொழுகைக்கு வீட்டைவிட்டு வெளியே வர வேண்டாம்” என மிரட்டல்களும் விடுத்துள்ளனர்.

உ.பி. முதல்வர் ஆதித்யநாத், ஹோலி அன்று மத வழிபாட்டுத் தலங்களில் ஒலிப்பெருக்கிகளைப் பயன்படுத்தக் கூடாது என கட்டுப்பாடு விதித்து, வெளிப்படையாக தொழுகைக்கான அழைப்புக்குத் தடை விதித்துள்ளார். அம்மாநிலத்தில் அமைச்சர் ரகுராஜ் சிங், “முஸ்லிம் ஆண்கள் தங்கள் மீது வண்ணங்கள் படக்கூடாது என்று நினைத்தால், தார்பாய்களை அணிந்து செல்லுங்கள்” என்று கேலி செய்துள்ளார். பா.ஜ.க.வினரின் இந்த வெறுப்பு, பேச்சுடன் நிற்காமல், உத்தரப் பிரதேசம், பீகார் உள்ளிட்ட மாநிலங்களில் மசூதிகள் தார்ப்பாய்களால் மூடப்படும் நிலை உருவாகி இருக்கிறது.

மதசார்பின்மையைச் சீர்குலைக்கும் பா.ஜ.க. அரசுகள் உள்பட ‘சங்பரிவார் கும்பல்கள்’ ஹோலி பண்டிகையை வைத்து, அரசியல் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

## ஃப்ளாஷ்பேக்



### கழகக் குடும்பமாக உணரவைக்கும் படம்!



கே.ஏ.ராஜீவ் காந்தி

என் தந்தை மத்தூர் எஸ்.கே.ஆறுமுகம், திருத்தணி ஒன்றியத்தில் கழகத்தின் மூத்த முன்னோடி. 1986-ஆம் ஆண்டில், இளைஞர் அணியின் கட்டமைப்பை வலுப்படுத்த, அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும், இன்றைய கழகத்தலைவரும், முதலமைச்சருமான தளபதி அவர்கள், தமிழ்நாடு முழுவதும் தீவிர சுற்றுப்பயணம் செய்தார். அப்போது திருத்தணி வருகை தந்த தளபதி அவர்களுக்கு, திருத்தணி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த என்னுடைய தந்தை வரவேற்பு அளித்து, மரியாதை செய்தார். அப்போது எடுக்கப்பட்ட படம், என்றென்றைக்கும் கழகக் குடும்பமாக எங்களை உணர வைத்துக் கொண்டிருக்கும்.

**- கே.ஏ.ராஜீவ் காந்தி, மத்தூர் கிளைக் கழகம், திருத்தணி, திருவள்ளூர் (மா).**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### இசை நிகழ்ச்சிக்குக் கொட்டகை!

1927-ஆம் ஆண்டு சென்னையில் 42-வது ‘அகில இந்திய காங்கிரஸ் மாநாடு’ நடைபெற்றது. அந்த மாநாட்டின் கொட்டகையிலேயே, முதல் நாள் ‘தென்னிந்திய இசை மாநாடு’ ஒன்று நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு காங்கிரஸ் வரவேற்புக் குழுவினர் வழங்கிய நிதியில் இருந்துதான், 1928-ஆம் ஆண்டு ‘மியூசிக் அகாடமி’ நிறுவப்பட்டது. ஆண்டுதோறும் இசை நிகழ்ச்சி தொடங்குகிறபோது, தலைமை உரையில் தமிழிசையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். ஆனால், அப்போது பலன் கிடைக்கவில்லை.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131